சுருக்க சங்கிரகம்



NR 21
N02
118600

Vol II

TDRC No. 1091

R. R. No. 130-4-1902

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
19 NOV 1902
MADRAS

உ

கடவுட்டுணை.

சங்கீத சந்திரிகை.

—:0:—

ம-ள-ள-ஸ்ரீ

சேலம் சுகவனமுதலியாரவர்கள்

குமாரரும்

இரண்டாவது கிரேட் வக்கீலுமான

சங்கீதாமுதத்திலிருக்கும்

S. மாணிக்கமுதலியார்

இயற்றியது.

—

நூலாசிரியர் சகோதரரான

சே. மாரியப்பமுதலியாரவர்கள்

விருப்பத்தின்படி

மேற்படியார் மருகரான

பு. வே. சபாபதிமுதலியாரால்

தம்முடைய

சென்னை:

சந்திரிகா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

—

All Rights Reserved.

விலை ரூ. 5.

784.0954
1091

NR2-1
1102
118600

உ

கணபதிதுணை.

உரிமையுரை.

ம-ா-ா-ஸ்ரீ

சேலம் சுகவனமுதலியாரவர்கள்

பௌத்ரனும்

நூலாசிரியர்தம் அருமைப் புத்ரசிகாமணியுமான

சிரஞ்சீவி

சங்கரவிஜயம்

என்னும் பாலியனின் ஒழுக்கநலத்தையும்

கல்விநலத்தையும் பற்றி அவற்கு அறிவுறுத்தல்கருதி

இந்நூலாசிரியரும்

சேலம் மாரியப்பமுதலியாரவர்களின் சகோதரரும்

இரண்டாவது கிரேட் பிளீடருமான

சங்ககிரியிலிருக்கும்

வக்கீல் S, மாணிக்கமுதலியாரால்

சங்கீத சந்திரிகை

என்னும் பெயர்பூண்ட இவ்விசைத்தமிழ் நூலானது

அத்யந்தப்ரியத்துடன்

தம்மைந்தற்கு

உரிமையாக்கப்பட்டது.

உ

சிறப்புரை.

இஃது
சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
பிரமஸ்ரீ. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் பி. ஏ.
எழுதிய சிறப்புரை.

"அகலல்குறோள்கண்ணென மூவழிப் பெருகி
நுதலடி நுசுப்பென மூவழிச் சிறுகிக்
கவலையாற் காமனும் படையிடு வனப்பின்"

என்று முல்லைக் கலியுட் கூறியாங்கு, மகளிர்க்கு மூன்றுறுப்புக்கள் பெருத்தும், மூன்றுறுப்புக்கள் சிறுத்துமிருத்தல் வனப்பாம். ஆதலின் இவ்வியன் முறையை யொட்டி நந்தமிழணங்கிற்கும் மூன்றுறுப்புக்கள் பெருத்திருத்தல் வேண்டுமென்றே அவை தாம் இயலிசை நாடக மென்னும் முத்தமிழுமாமென எதிர் நிரனிறையிற் கொள்க. அங்ஙனங் கொள்ளுமிடத்து இசைத் தமிழ் நந்தமிழ்மாதின் கொங்கைகள் போலுமெனல் போதரும். சீகாழியின்கண் உமாதேவியாரது திருமுலைப் பாலுண்ட பெருமையானன்றோ நந் திருஞானசம்பந்தப் பெருமானும் பண்கனிந்த இன்னிசைத் தேவாரப்பதிகங்கள் மொழிந்தருளுமென்க. இவ்வுண்மை நங்கூற்றினை வலியுறுத்துமாறு காண்க.

இத்துணைச் சிறப்பினதாக மதிக்கப்படும் அவ்விசைத்தமிழமிழ்துண்டாரே இசைநூல் வல்லோர். இங்ஙனம் இசைப் பாலூட்டி வளர்த்த நந் தமிழ்த்தாய்க்கு நம்மவராவார் நன்றி பாராட்டுதல் இயல்பாமன்றே. அன்றியுந் தமிழ்த்தேவியின் திருமேனியில் முன்பு விளங்கிய அணிகலன்களெல்லாம் புறக்கப் பெறாது அழிந்து பட்டனவாக. அஃதுணர்ந்துகொண்டு இசைநூல் வல்ல தமிழர் சில புத்தணிகளாதல் புனைந்திடுதல் கடமைத்தாம் அன்றோ. ஆதலின் அவ்வாறே இசைத் தமிழ்ப் பாலுண்டு வளர்ந்த நமது சேலநகர் மாணிக்கமுதலியாரவர்களும்

தம்மா லியன்றமட்டில் நம்மனைவர்க்கும் பொதுத்தாயாகிய தமிழ் மகட்குச் சங்கீத சந்திரிகை யென்றதோ ரணிகலஞ் செய்திட்டமை யாவரும் மதிக்கத்தக்கதே.

இதுநிற்க இந்நூல் மூன்றுபாகங்க ளுடைத்து. முதற்பாகம் ஸ்வரப்பிரகரண மென்னும் பெயரிற்றாய், இராகங்களின் இயல்பு பாகுபாடு முதலியவற்றை விரித்துக் கூறுவது. இப்பகுதி மேளகர்த்தாவை யொட்டி யியற்றப்பட்டுளது. இரண்டாம்பாகம் தாளப்பிரகரண மென்னும் பெயரிற்றாய்த் தாளங்களின் வகை பண்பு முதலியவற்றை விரித்துக் கூறுவது. இதன்கண்ணே பரதத்திற்குரிய தாளவணிகளுங் கூறப்பட்டுள. மூன்றாம்பாகம் பாடப்பிரகரண மென்னும் பெயரிற்றாய், இசைபயிலும் மாணாக்கர்க்குப் பயிற்சி முறையைப் பலவகைய உதாரணமுகத்தான் விவரித்துக் கூறுவது. இவை யனைத்தும் யாவருக்கும் பொருள் விளங்கத்தக்க தெளிவான இனிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்குந்தன்மை மிகவும் பாராட்டற் குரியதே. நூலினமைப்பும் ஒழுங்கும் யாவரும் கண்டு கொண்டாடத்தக்கன. மற்று இதனைப் பேரறிவாளராயினார் அன்புடன் பேணிப் போற்றுவார்க ளென்னுந் துணிவுடன் இச்சிறப்புரை வரைவான் புகுந்தேன்.

சென்னை.
1-11-1902. } வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார், பி. ஏ.

உ

கடவுள் துணை.

முகவுரை.

சங்கீத சாஸ்த்ரத்திலுள்ள பல முக்யாம்சங்களைக் கண்டறியும்படியாக இதுவரையில் எவ்விதநூலும் தமிழில் எழுதப்பட்டிருக்கவில்லை யாகையால், சங்கீதசந்திரிகை யென்னும் இந்நூலைத் தமிழில் எழுதலானேன். சங்கீத சாஸ்த்ரமும், சங்கீதமும் கற்கும்பொருட்டு இதுவரையில் சிலரால் தெலுங்கு முதலான பாஷைகளிற் சில சங்கீத புஸ்தகங்கள் அச்சிடப்பட்டுமிருந்தாலும், அவைகளில் விவரிக்கப்படாத அநேக விஷயங்களைச் சங்கீதப்பயிற்சி யடைபவர்களும், சங்கீதப்பயிற்சியடைய விருப்பமுடையவர்களும், சங்கீத சாஸ்த்ரத்தையும் சங்கீத வித்தையையும் சுலபமாய்க் கற்கும்பொருட்டுச் சங்கீத சாஸ்த்ரத்தைப் பல வருஷகாலம் ஆராய்ந்த நீண்ட பரிசோதனையைக்கொண்டும், சங்கீதவித்தையைப் பல வருஷகாலம் அநுபவித்த நீண்ட ஸ்வாநுபவத்தைக்கொண்டும், இந்நூலானது என்னாற் கொஞ்சம் விரிவாய் அதி ஸ்பஷ்டத்தையுடன் எழுதப்பட்டிருக்கின்றது.

இந்நூலில் சொல்லப்பட்டிருக்கும் பல நாமதேயங்களுக்கும், லக்ஷணங்களுக்கும் மற்றவைகளுக்குமுள்ள காரணங்கள் ஆங்காங்கு விவரிக்கப்பட்டிருப்பதுடன், விரிவாயுள்ளவைகளைச் சுலபமாயறியும்பொருட்டுச் சுருக்கமான பல சக்ரங்களும் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. ராகத்தின் பெயரைக்கொண்டு அதின் ஆரோஹணாவரோஹணத்தையும், ஆரோஹணாவரோஹணத்தைக் கொண்டு அதின் ராகத்தையும் சுலபமாய்த் தெரிந்துகொள்ளும்பொருட்டு, ஆயிரம் ராகாகராதியும் ஆயிரம் ஸ்வராகராதியும் தனித்தனியா யெழுதப்பட்டிருக்கின்றன.

வீணை மேளம்செய்யும் விதிகள் விவரிக்கப்பட்டிருப்பதில் ஸ்ருதிஞானமுள்ளோர் ஸ்ருதிஞானத்தைக்கொண்டு மேளம் செய்யவும், ஸ்ருதிஞானமில்லோர் அளவு ப்ரமாணத்தைக்கொ

ண்டு மேளம் செய்யவும், இரண்டுவிதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வீணைதண்டத்திலுள்ள தொண்ணூற்று ஸ்வரஸ்தானங்களும் அவைகளிலுள்ள சம ஸ்வரஸ்தானங்களும் குறிப்பிட்டு விவரிக்கப்பட்டிருக்கின்றன. ராகப்ரஸ்தாரத்தைச் சஹஜமாய் எவ்வளவுக்கு ப்ரஸ்தரிக்கக்கூடுமோ அவ்வளவுக்கு மீறியே ப்ரஸ்தரித்திருப்பதுடன், தாளப்ரஸ்தாரமும், சப்தாங்கப்ரஸ்தாரமும், அஷ்டஷோடச சங்கை முதலிய பல தாளவிஷயங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்நூலை வாசிப்போரும் கற்போரும் இந்நூலின் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கும் பிழைதிருத்த அட்டவணையின்படிப் பிழைகளைத் திருத்திக்கொண்ட பின்னரே வாசிப்பதும், கற்பதும் நன்று.

தேவாரம், திருவாசகம், திருவருட்பா முதலிய நூல்களின் பாடல்கள் மிகவும் உன்னதமானவை யென்பதை யெவரும் மறுக்கார்கள். அவையெல்லாம் தாளக் கட்டுப்பாட்டுடன் அமைக்கப்பெற்றன அல்லவாயினும், அப்பாடல்களைத் தாளக்கட்டுப்பாட்டுக் குட்படுத்திப் பல ராகங்களில் யாவரும், பாடவும் வாத்தியங்களில் வாசிக்கவும் வசதிப்படுத்திவைத்தல் யாவரும் கொண்டாடத்தக்க அரிய விஷயமேயென எனக்குப் புலப்பட்டு, மூவர் தேவாரம், திருவாசகம், திருவருட்பா, கைவல்யநவநீதம், திருமந்திரம் பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருவுந்தியார், சிவரகசியம், ஞானவாசிஷ்டம், நாலாயிரப்பிரபந்தம், குமாரதேவர் சாஸ்திரம், தாயுமானவர்பாடல், திருக்குறிப்புத்தொண்டர் விவேகம், கந்தரநுபூதி, பகவத்கீதை, பிரமகீதை, ரிபுகீதை, பிரபுலிங்கலீலை, பட்டினத்தார் பாடல், சித்தர்கள்பாடல், மஸ்தான்சாகிபுபாடல் முதலான சுமார் 50 க்ரந்தங்களிலுள்ள விருத்தம், வெண்பா, கலித்துறை முதலிய பல பாவினங்களில், சுமார் 650 அருமையான பாடல்களைப் பொறுக்கித் திரட்டி, அவைகளை அப்யாசிகளும் மற்றையோரும் சுலபமாய்க் கற்கும்பொருட்டு, அப்பாடல்களெல்லாம் ஸ்வரசாஹித்யமாக மிகவுந் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன.

தாளக்ஞான மிருந்தும் ஸ்ருதிக்ஞான மில்லாதோர் சிலராயிருப்பினும், ஸ்ருதிக்ஞான மிருந்தும் தாளக்ஞான மில்லாதோர் பலருண்டு. அவர்களெல்லோரும் இந்நூலால் விசேஷ ப்ரயோஜனமடைய இடமிருக்கின்றது. ஆரம்பத்தில் அத்யாவேசத்துடன் சங்கீதங்கற்க ஆரம்பித்து சிலகாலங் கழிந்தபின்னர் அடியோடு கைவிட்ட அப்யாசிகள் அநேகருண்டு. சூக்ஷ்மம் எதிலிருக்கிறதென்ற நுட்பத்தையறியுமுன் கைவிட்ட பல்ஹின்ஸ்தர்களே யவர்கள். சங்கீதங்கற்பதற்கு அத்யாவச்யமான பொருளையும் விடாமுயற்சியும் அற்றவர்களே யவர்கள். அந்நோருடைய ப்ரயோஜனார்த்தத்தை முன்னிட்டும் இதிற் பலவிஷயங்கள் ஆங்காங்கு விவரித் தெழுதப்பட்டிருக்கின்றன. ஆதியில் தாங்கள் கோரிய ப்ரயோஜனத்தை யிந்நூலால் அவர்கள் அடையக்கூடும். இடப்ரயத்தனப்பட்டும் இந்நூலா லவர்கள் கிஞ்சித்தும் ப்ரயோஜனத்தை யடையாதபக்ஷத்தில், உள்ளபடி யவர்களுக்கு நிஜ சங்கீத க்ஞானப்ராப்தம் இல்லையென்றே நிராக்ஷேபமாய்த் தீர்மானிக்கவேண்டும். அப்படியாக ஆயிரத்துள் ஒன்றுதான் இருக்கும். மற்றையோரெல்லவரும் இந்நூலைக் கைக்கொண்டு ஏராளமாய்க் குணப்படுவார்களென்பதிற் சந்தேகமேயில்லை.

இந்நூலை மூன்றுபாகங்களாகப் பிரித்து, முதற்பாகத்துக்கு ராகப்ரகரணம் என்றும், இரண்டாம்பாகத்துக்குத் தாளப்ரகரணம் என்றும், மூன்றும்பாகத்துக்குப் பாடப்ரகரணம் என்றும் பெயரிடப்பட்டு, பாகம் 1-ல் 32 அம்சங்களும், பாகம் 2-ல் 30 அம்சங்களும், பாகம் 3-ல் 162 பாடங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

"ஓரா தெழுதினே னாயினு மொண்பொருளை
யாராய்ந்து கொள்வ தறிவுடைமை—சீராய்ந்த
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்" ஆகையால்,

அன்னப்பக்ஷியைப்போல் பேரறிவாளர்கள் குற்றத்தைப்போக்கி குணத்தைமட்டும் கைக்கொள்வார்களென்றும், இந்நூலின் அபி விர்த்தியை விரும்புகின்றவர்கள் அதற்கானபடி விஷயங்களைச் சேர்த்து சிற்றறிவினனான எனக்கு உதவுவார்களென்றும் நம்பி மிகவும் வணக்கமாயிதையெழுதி விடுக்கலானேன்.

"சந்தனத் தாருவைச் சார்ந்திடு வேம்புந் தகைமணமே
தந்திடு மென்பவச் சால்பெதற் காயிந்தத் தாரணியில்
அந்தமில் கேள்வி யறிஞரை நானு மடைந்தவென்சொல்
சந்தமு றுதிருந் தாற்றவ ரார்வையிற் சார்வதுவே."

சங்ககிரிதுருகம்.
1902ளு
நவம்பர்மீ 1உ

S. மாணிக்கமுதலியார்

அடக்கம்.

பக்கம்.

சிறப்புரை ... ... (A)
முகவுரை ... ... (B)
அடக்கம் ... ... (C)
நூல்குறிப்பகராதி ... ... (D)
தாளக்குறிப்பகராதி ... ... (E)
ராகக்குறிப்பகராதி ... ... (F)
சாத்துக்கவிகள் 1

1-வது பாகம். ஸ்வரப்ரகரணம்.

(1) சப்த ஸ்வரங்கள் ... 1
(2) ஷோடச ஸ்வர சம்யோகங்கள் ... 1
(3) த்வாதச ஸ்வர ஸ்தானங்கள் ... 2
(4) சப்த ஸ்வர நாமதேயங்களுக்குக் காரணம் ... 2
(5) சப்த ஸ்வர த்வனிகள் ... 3
(6) சப்த ஸ்வரங்களுக்குக் காரணம் ... 4
(7) ஷோடச ஸ்வரங்களுக்குக் காரணம் ... 4
(8) த்வாதச ஸ்வர ஸ்தானங்களுக்குக் காரணம் ... 4
(9) ஷோடச ஸ்வர சம்யோகங்களின் வரிசை க்ரமத்துக்குக் காரணம் ... 4
(10) ஷோடச ஸ்வர வரிசை க்ரமசக்ரம் ... 5
(11) ஷோடச ஸ்வர சம்யோகங்களின் நாமதேயங்களுக்குக் காரணம் ... 6
(12) ஸ்வர சப்த பேதங்கள் ... 7
(13) ஸ்வர சஞ்சார பேதம் ... 7
(14) ஸ்தாயி ... 8
(15) ஸ்ருதி ... 8
(16) தசவித கமகம் ... 9
(17) ஏகவிம்சதி மூர்ச்சனைகள் ... 11
(18) த்வாவிம்சதி ஸ்ருதிகள் ... 12
(19) வீணை மேளஞ் செய்யும் லக்ஷணங்கள் ... 13
1. ஸ்ருதிப்ரமாண லக்ஷணம் ... 13

பக்கம்.

2. அளவு ப்ரமாண லக்ஷணம் 15

(20) வீணைதண்டத்திலுள்ள 96 ஸ்தானத்தின்

1. ஸ்வரப்பெயர் ... 17

2. வீட்டு லக்கம் ... 18

3. ஸ்வர வீட்டிலக்கம் ... 19

4. ஸ்வர சம ஸ்தான வீட்டு லக்கம் ... 19

(21) ஸ்வரப்ரஸ்தாரம் ... 20

(22) ஸ்வர ப்ரஸ்தாரக்ரமம் ... 20

(23) ராக பேதங்கள் ... 25

(24) ராக ப்ரஸ்தாரம் ... 27

1. சுத்த சம்பூர்ணம் ... 27

2. வக்ர சம்பூர்ணம் ... 27

3. சுத்த ஷாடவம் ... 28

4. வக்ர ஷாடவம் ... 29

5. சுத்த ஔடவம் ... 34

6. வக்ர ஔடவம் ... 34

ப்ரஸ்தார மொத்தம் ... 43

ப்ரஸ்தார ஒட்டுமொத்தம ... 46

(25) வரிசை க்ரமமாக 72 மேளகர்த்தாக்கள் ... 47

(26) எழுபத்திரண்டு மேள கர்த்த சக்ரம் ... 48

(27) எழுபத்திரண்டு மேள கர்த்தர்களுக்குக் காரணம் 49

(28) கடபயாதி சங்கை ... 50

கடபயாதி சக்ரம் ... 51

(29) எழுபத்திரண்டு மேளகர்த்த ராகாகராதி ... 51

(30). மேளகர்த்த ஜன்ய ராகாகராதி ... 53

(31) ஜன்யராக ஸ்வராகராதி ... 85

(32) ராக விமர்சனைகள் ... 117

1. அநு ராகங்கள் ... 117

2. கன ராகம் ... 127

3. தேஸ்ய ராகம் ... 127

4. நய ராகம் ... 127

5. நவரச ராகம் ... 127

பக்கம்.

6. தமிழிசை ராகம் 127

7. ஸ்ரீராகம் புருஷராகம் தாதிராகம் புத்ரராகம் 128

8. உதய ராகம் ... 128

9. பராந்ன ராகம் ... 129

10. மத்யாந்ன ராகம் ... 129

11. அபராந்ன ராகம் ... 129

12. சாயாந்ன ராகம் ... 129

13. முன்ராத்ரி ராகம் ... 129

14. மத்யராத்ரி ராகம் ... 129

15. பின்ராத்ரி ராகம் ... 129

16. வசந்தகால ராகம் ... 129

2-வது பாகம். தாளப்ரகரணம்.

(1) தாளம் ... 130

(2) தாளப்ரமாணம் ... 130

1. காலம் ... 130

2. மார்க்கம் ... 130

3. க்ரியை ... 131

4. அங்கம் ... 131

சப்தாங்க சக்ரம் ... 132

சப்தாங்க விநியோக விவரம் ... 133

சப்தாங்க சம்யோக ஷோடசாங்க சக்ரம் 133

5. க்ரஹம் ... 134

6. ஜாதி ... 134

7. களை ... 134

8. லயம் ... 134

9. யதி ... 134

ஷட்யதி விவரம் ... 135

யதி நாமபேதத்துக்குக் காரணம் ... 135

யதி ப்ரஸ்தாரம் 136

10. ப்ரஸ்தாரம் 136

(3) 7-35-175-தாள சக்ரம் 137

		பக்கம்.
(4)	7-35-தாள உதாரண அலங்காரங்கள் ...	140
	1. சதுஸ்ரஜாதி சப்த அலங்காரங்கள் ...	141
	2. திஸ்ரஜாதி சப்த அலங்காரங்கள் ...	142
	3. மிஸ்ரஜாதி சப்த அலங்காரங்கள் ...	143
	4. கண்டஜாதி சப்த அலங்காரங்கள் ...	145
	5. சங்கீர்ணஜாதி சப்த அலங்காரங்கள் ...	146
	175 தாளங்களுக்கு உதாரணம் ...	148
(5)	35-தாள சமாக்ஷர கால சக்ரம் ...	151
(6)	175-தாள சமகளாகால சக்ரம ...	152
(7)	பஞ்ச தாளங்கள் ...	157
(8)	நூற்றெட்டு தாளங்கள் ...	157
(9)	நூற்றெட்டு தாள அலங்காரங்கள் ...	161
(10)	நூற்றெட்டு தாள மொத்தாங்க சக்ரம் ...	169
(11)	540 தாளங்களின் விவரம் ...	169
(12)	நூற்றெட்டு தாள சமாக்ஷரகால சக்ரம் ...	170
(13)	5-108-தாளாகராதி ...	171
(14)	72-தாளங்களின் விவரம் ...	172
(15)	72-தாள மொத்தாங்க சக்ரம் ...	176
(16)	72-தாள சமாக்ஷரகால சக்ரம் ...	177
(17)	72-தாளாங்க சம்யோக சக்ரம் ...	178
(18)	72-தாளங்களின் வரிசைக்ரம விவரம் ...	178
(19)	ப்ரஸ்தார க்ரமம் ...	181
(20)	சப்தாங்க ப்ரஸ்தாரம் ...	184
(21)	சப்தாங்க ப்ரஸ்தாராங்க லக்ஷ சக்ரம் ...	187
(22)	அநுத்ருத மேரு சக்ரம் ...	188
(23)	த்ருத மேரு சக்ரம் ...	189
(24)	த்ருத சேகர மேரு சக்ரம் ...	190
(25)	லகு மேரு சக்ரம் ...	190
(26)	குரு மேரு சக்ரம் ...	190
(27)	ப்லுத மேரு சக்ரம் ...	190
(28)	காகபத மேரு சக்ரம் ...	191
(29)	சம்யோக மேரு சக்ரம் ...	191
(30)	தாள ப்ரஸ்தாரம் ...	192

3-வது பாகம். பாடப்ரகரணம்.

பாடப்ரகரண விவரணம் ...	*1
பாடங்கள் ...	*9
அட்டவணை ...	*177
பிழைதிருத்தம் ...	(ஏ)

(D) பாட ப்ரகரணத்தி லெடுத்தாண்ட

நூல்களின் பெயரும் பாடல்மொத்தமும்.

நூல்குறிப்பகராதி	பாடல்.	நூல்குறிப்பகராதி	பாடல்.
1. அகப்பேய்சித்தர்	8	26. திருப்புகழ்	4
2. அத்வைதவுண்மை	4	27. திருமந்திரம்	12
3. அப்பர்தேவாரம்	33	28. திருவாசகம்	13
4. திருவருட்பா	98	29. திருவாய்மொழி	34
5. உபநிஷத்தம்	2	30. திருவிளையாடல்	4
6. கடுவெளிச்சித்தர்	9	31. திருவுந்தியார்	5
7. கந்தபுராணம்	2	32. நந்தனார்சரித்திரம்	38
8. கந்தரநுபூதி	4	33. நாலாயிரியர்	12
9. திருக்குறள்	15	34. பகவத்கீதை	4
10. கைவல்யநவநீதம்	53	35. பட்டணத்தார்பாடல்	9
11. சிவஞானபோதம்	3	36. பதிபசுபாசவிளக்கம்	4
12. சம்பந்தர்தேவாரம்	83	37. பழனிபுரிமாலை	8
13. சிவஞானசித்தியார் சுபக்ஷம்	2	38. பழனிக்கோயில்விண்ணப்பம்	7
14. சிவஞானசித்தியார்பரபக்ஷம்	3	39. பாம்பாட்டிச்சித்தர்	5
15. சிவப்பிரகாசம்	2	40. பிரபுலிங்கலீலை	4
16. சிவரகசியம்	2	41. பிரபோதசந்திரோதயம்	4
17. சிவவாக்கியர்	8	42. பிரமகீதை	8
18. சுத்தசாதகம்	4	43. பெரியபுராணம்	27
19. சுந்தரர்தேவாரம்	26	44. மஹாராஜாதுறவு	4
20. சொரூபசாரம்	4	45. மஸ்தான்சாகிபுபாடல்	11
21. ஞானவாசிஷ்டம்	16	46. மிட்டாய்க்கண்ணி	7
22. ஞானவெட்டி	2	47. ரிபுகீதை	2
23. தாயுமானவர்	31	48. விஞ்ஞானசாரம்	4
24. திருக்குறிசியவிவேகம்	4		
25. திருச்சந்தவிருத்தம்	4	பாடல் மொத்தம்	647.

(E) பாட ப்ரகரணத்தி லெடுத்தாண்ட

தாளங்களின் பெயரும் பாட மொத்தமும்.

தாளக்குறிப்பகராதி	பாடம்.	தாளக்குறிப்பகராதி	பாடம்.
1. கண்ட ஏக உசி	3	15. திஸ்ரத்ரிபுட	1
2. கண்ட ஏகம்	2	16. திஸ்ரத்ரிபுடசாபு	4
3. சதுஸ்ர அடசாபு	1	17. திஸ்ரத்ரிபுடசாபுஉசி	22
4. சதுஸ்ர அடசாபு உசி	1	18. திஸ்ரமட்யசாபு	1
5. சதுஸ்ர ஏக உசி	15	19. திஸ்ரமட்யசாபுஉசி	4
6. சதுஸ்ர ஏகம்	44	20. திஸ்ரரூபகசாபு	3
7. சதுஸ்ரத்ரிபுடசாபு	3	21. திஸ்ரரூபகசாபுஉசி	5
8. சதுஸ்ரமட்யசாபுஉசி	1	22. திஸ்ரரூபகம்	2
9. சதுஸ்ரரூபகஉசி	4	23. மிஸ்ரஏகஉசி	2
10. சதுஸ்ரரூபகசாபு	1		
11. சதுஸ்ரரூபகசாபுஉசி	2	மொத்தம்	163
12. சதுஸ்ரரூபகம்	6	129-வீது பாட அதிக தாளம்	1
13. திஸ்ரஏகஉசி	15		
14. திஸ்ரஏகம்	21	போக பாடமொத்தம்	162

(F) பாட ப்ரகரணத்தி லெடுத்தாண்ட ராகங்களின் பெயரும் பாட மொத்தமும்.

ராகக்குறிப்பகராதி	பாடம்.	ராகக்குறிப்பகராதி	பாடம்
1. அடாணா	1	37. தன்யாசி	2
2. ஹம்சத்வனி	1	38. தீரசங்கராபரணம்	8
3. ஹரிகாம்போதி	7	39. தோடி	10
4. ஆபோகி	2	40. நாகஸ்வராவளி	1
5. ஆரபி	4	41. நாட	1
6. ஆனந்தபைரவி	5	42. நாடகுறிஞ்சி	1
7. உசேனி	1	43. நாதநாமக்ரிய	3
8. கமாஸ்	9	44. நீலாம்பரி	1
9. கரஹரப்ரிய	7	45. பருஜ	1
10. கருடத்வனி	2	46. பிலஹரி	2
11. கல்யாணி	3	47. புன்னாகவராளி	2
12. கன்னட	2	48. பூபாளம்	1
13. காபி	1	49. பூர்ணசந்த்ரிக	1
14. தருமவர்த்தனி	4	50. பூர்வகல்யாணி	2
15. காம்போதி	5	51. பேகட	1
16. கீரவாணி	3	52. பைரவி.	3
17. குரஞ்சி	1	53. பௌளி	1
18. கேதாரகௌளம்	1	54. ப்யாக்	2
19. கேதாரம்	4	55. ப்ரவாளஜோதி	1
20. கோகிலத்வனி	1	56. மத்யமாவதி	1
21. கௌரிபந்து	1	57. மலஹரி	1
22. கௌள	2	58. மலயமாருதம்	1
23. சஹானா	1	59. மாயாமாளவகௌள	6
24. சக்ரவாகம்	1	60. முகாரி	2
25. சங்கராபரணம்	7	61. மோஹனம்	6
26. ஜஞ்ஜூடி	3	62. யதுகுலகாம்போதி	6
27. சாம	2	63. யமுனாகல்யாணி	1
28. சாரங்க	1	64. வசந்த	1
29. சாவேரி	3	65. வராளி	3
30. ஸ்ரீராகம்	3	66. விலாசினி	2
31. சுத்தசாவேரி	1		
32. சுத்ததேசி	1	மொத்தம்	174
33. சுத்தநாட	1	58-59-60-வது பாடங்களில்	12
34. சுத்தமத்யமம்	2	திரிகராங்கள் போக	
35. சுரடி	4	பாடமொத்தம்	162.
36. சுரானந்தினி	3		

சாத்துக்கவிகள்.

—(:)—

மஹாவித்வான்
கும்பகோணம் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
பிரம்மஸ்ரீ. வே. சாமிநாத ஐயரவர்களியற்றிய
விருத்தம்.

இக்காலத் துறவருகி விழங்குமிசை யிலக்கணங்கள் யாவுஞ் சாலத், தொக்காரச் சங்கீத சந்திரிகை யெனுமொருநூல் துலங்கச் செய்தான், மிக்கார்சேர் சேலநக ருறைந்திடுவோன் மாரியப்ப வேளின் பின்னோன், தக்கார்பா லன்புடையன் மாணிக்கமென்னுமபி தானத் தோனே.

இசைக்குரிய வழியிஃதென் றிசைநூல்க ளாய்ந்து தன்பேர்க் கிசையுமாறு, நசைக்குரிய விந்நூலை யாக்கியமா ணிக்கமெனு நாமத்தாற்கும், திசைக்குரிய புகழ்மிகுத்த விதனையெளி தெவருமுறச் செய்தசெல்வன், வசைக்குரிய வழிதவிர்ந்த மாரியப்ப வேட்குநகைம் மாமிறன் னேயோ.

சென்னைக்கிறிஸ்தியன் காலேஜ் தலைமைத் தமிழ்பண்டிதர்
பிரம்மஸ்ரீ. வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள், B.A.
இயற்றிய விருத்தம்.

அஞ்ஞான்று பாற்கடன்மால் கடைந்தபொழு தெங்கமதி யடைவின் வானோர், நஞ்ஞால்த நள்ளார வெவ்வெவர்க்கு மின்பவெளி நல்குமாபோ, லிஞ்ஞான்று மாணிக்க வள்ளலிசைக் கடல்கடைய வினிதெழுந்து, சுஞ்ஞான வொளிபரப்பிச் சங்கீத சந்திரிகை துலங்கிற்றம்மா.

தமிழ்ப்பண்டிதர்
பிரம்மஸ்ரீ. தி. வெங்கடராம ஐயங்காரவர்களியற்றிய
விருத்தம்.

பாலமுது கைக்குமெனவீணைச் மெயக்களித்த பண்பின், மிக்கோன், சாலவுமே யோயவகை யிரண்டெனினுஞ் சாதிக்குஞ் சதுரவாதி, சேலநகர்ச் சுகவநத்தின் சேயொளிரு மாணிக்க மகிபனீய்ந்த, காலநயச் சங்கீத சந்திரிகை கானரசக் கடற்குக் கண்ணே.

மன்னார்குடி மிஷன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீ உபய. வே. P. R. கிருஷ்ணமாசாரியரவர்கள்
இயற்றியது.

தேனொரு நிறையின்ப முறுநுகர்தற் கொருபெரிய செல்வமாகி
வானொரு மகிழிசையுஞ் சங்கீத சந்திரிகை வாயிலாக [டானல்
வனொரு மகிழ்ந்துகொள வீரணிக்க மெனுமிசையா னிசைத்திட்
டீனொருக் கரியவிந்நா லிசைநூலா நிலவுறுக வியற்கையாமே.

சென்னைக் கிறிஸ்தவ காலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
பிரமஸ்ரீ - வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்களது
மாணாக்கருளொருவரும்,
கடலூர்க் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதருமாகிய
பிரமஸ்ரீ - ந. பலராம ஐயரவர்கள்
சொல்லிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

துதிபெறுநா வலிதய குமுதமல ரெழில்சிறந்து சுவைகொ
டுந்தேன், பொதிதரவா ளிசையமுத வொளிபரப்பிப் புவியினி
டைப் பெருவிலராது சதிருறுசங் கீதசந்தி ரிகையிலங்கத் தகை
மையுடன் றந்தானெங்கு, மதில்புடைசூழ் சேலநகர் மாணிக்கப்
பெயருடைய மதிவல் லோனே.

ஆரணிநகர் சமஸ்தான வித்துவானும், அத்துவிதசித்தாந்த
முகோத்தாரணரும், மாயாவாத தும்ஸகோளரியும் ஆகிய
யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி
ஸ்ரீமான். நா. கதிரைவேற்பிள்ளை அவர்களியற்றியது.

சிறப்புப்பாயிரம்.

[1] உலகெல்லா முணர்வரிய பரசிவன்ற னருளாலிங் குயிர்கள்
போதத், திலகிடத்தொண் ணூற்றாறங் குலிநடுவி னாதாரத் திசை
யும் விந்துத், தலமதினின் றெருநாதம் புறப்படஇத் தரியுவகை
சார்ந்து நான்கு, குலவாக்கி னையிணுக்கள் கூடவே யெழு
பூத்துக் குலவு மன்றே.

---

[1] தொண்ணூற்றாறங்குலி—பூதவுடம்பு. நடு—மூலாதாரம். ஒவ்வொரு சரீரத்தினளவுந் தன்கையினால்தொண்ணூற்றாறு அங்குலமுடையது என்ப. இதனால் தொண்ணூற்றாறு தத்துவமென்னு முண்மை தெற்றெனவிளங்கும். தொண்ணூற்றாறு அங்குலத்தில் மேலே நாற்பத்தேழரை யங்குலமும், கீழே நாற்பத்தேழரை யங்குலமும்விட்டு நடுநின்ற ஓரங்குலமே மூலாதாரம் என்றார் இசைநுணுக்கநூலார். ஆதாரம் என்றது மூலாதாரத்திற்கு மேலே நால்விரல்விட்ட கந்தர்த்தானமாகிய பின்னாதாரத்தையென்க. விந்து—பரநாதமாகிய சிவ தத்துவத்தினின்றுந் தோன்றிய சத்திதத்துவ விந்து.

[2] அன்னவையா ளத்தியாய்ப் பின்னிசையாய்ப் பன்னொன்று
யிராயு மத்தோ டொன்னுதொள்ளா யிரத்தொன்பா னூற்றொன்
றாய்க் கிரியையிடத்துறழ்த லாற்பண், பன்னுமிங்ஙனவிலிசை
த்துமேன் மையுமாகித் தலங்கு மென்றும், பன்னுவதுங்
கேட்பதுவு முணர்வதுவு மதன்பயனே பாரீர் பாரீர்.

[3] எழ்பிறப்பி னுளவுயிரு மெண்ணரிய சடப்பொருளு மித
னைக் கேட்டே, காழ்நீறக்குந் தமதுருவுங் கரைந்துருகும் பத்தி
மிகுங் காணு மென்னைத், தாழ்விறப்ப வின்பமதிற் றங்கிவிடு
மேதினிக்குந் தட்டா தென்றாய், வாழ்பரனு மிசைக்கன்றே
வுருவுற்றிக் திருவருளை வார்க்கின் றானால்.

[4] தோடுடைய செவியனென்று வேதமதந் தொட்டன்றே
தொல்லோர் பாட்டிற், பிடுடைய விசைநன்றே யென்றனரீவ்
விசைப்பெருமை புகலப்போமோ, நீடுடைய வொருவகையர் பிர
மமெனப் பேசிடுவர் நேரிலீது, வீடுடைமைக் கேதுவான் வட
மொழியு மெம்மொழியும் விரிக்கும் கோடும்.

[5] செந்தமிழின் முதற்றலைச்சங் கப்புலவர் நாரதர்நற் சிகண்டி
சுத்தா, னந்தவெழிற் கவியாதி வராமர் மற்றையரு மாற்று
நூல்கள், ளெந்தவிடத் துற்றனவோ பட்டனவோ யாங்காண்ப
தென்றோவென்று, சந்தவிய னூடகநற் புலவரெனு மாம்பலவை
சாம்புங் காலே.

---

[2] ஆளத்தி—காட்டாளத்தி, நிறஆளத்தி, பண்ணாளத்தியென மூவகைப்படும். இசை—நரம்பினடைவால்வரும் பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்றாகிய ஆதியிசைகள். அவற்றை "உயிருயிர் மெய்யளவுரைத்த வைம்பாலினும்" எனவரூஉஞ் சூத்திரத்தானறிக. கிரியையிடத்து உறழ்தலால் கிரியைகளெட்டானும், பெருந்தானமெட்டினும்பண்ணலால் பண்ணாயிற்று.

[3] காணு - வினைமுற்று.

[4] ஒருவகையர் - சத்தப்பிரமவாதிகள்.

[5] சங்கப்புலவர்செய்தன - பெருநாரை, பெருங்குருகு முதலாயின. நாரதராகிய தேவவிருடியால் செய்யப்பட்டது - பஞ்சபாரதீயம். சிகண்டிமுனிவரர் செய்தது-இசைநுணுக்கம். சுத்தானந்தவியற்கவியர் இயற்றியது - சுத்தானந்தப் பிரகாசிகை. அறிவனாசிரியர் அருளியது - பஞ்சமரபு. யாமர் - யாமளேந்திராசிரியர். இவர்செய்தது இந்திரகாளியம். மற்றையர் நூல்களென்றது நாளவகையோத்து, வீரமாலை, வெண்டாளி, முறுவல், சயந்தம், முதலியவற்றை.

குசைப்பாலி னுன்னுணர்வோர் செறிசேலக் கிரித்துருக்கக் குடபீரன்மேலி, னிசைப்பூலின் வருணமதிற் பூபாலன் சுகவணத்து வேந்த னேற்ற, விசைப்பாலிற் பாற்கடலினெழுமதியக் கொழுந்தெனமின் னிடைபாற் றோன்றித், திசைப்பாலி னிசைச்சீதக் கலைகளவை தன்கணிறைத் தெழுந்தோ னின்னும்.

யாழ்குழல்சீர் மிடறுதளீத் தேன் றுமிருவகைப்பாடலியக்க நான்கி, னும்பாணி விகற்பமுடந் தேசிகந்தாக் கிவையிரய்ந்தி யாழிற் பாருக், தாழீர்நாற் கலைவிதத்தி லிசையெழுப்பி யளிக்குலத்திற் சிரேவெழான், றாழ்காட்டிக் கேட்பவரை புளப்படுத்து மிசைப்புலவ் ரொன்மை சார்ந்தோன்.

ஆங்கிலமுந் தேசிகமு மறிந்த நன்னியாயதுரந் தரனந் தேவந், தாங்குமொரு வேற்பரனின் றிருவடியே கதியெனக் கொண்டொழுகுஞ் சாந்தன், பாங்கியனு நன்மொழிசேர் மாரியப்பவள்ளறுணைப் பன்பேரன் கீத, மோங்கியசந் திரன்மானிக் கப்பெருவே லென்னெருவ னுள்ளான் மாதோ.

முன்னேயரி னூல் சிலவைத் தண்டமிழிற் புத்தமிழ்தாக் கீநமுற்றும், பின்னையரோர்ந் துளங்களிகொண் டன்புறீஇ மலந்தபுக்கப் பிறங்குமாரித், தன்னையனன் னயன்முயற்சி தனைக்கொண்டே சட்சமுதற் சுரங் கடான, மன்னனைவபேர் தொனிகருவி கிரமுவகை சஞ்சார மார்ச்சை யெட்டு.

தன்சொலினு மினியதென வொருமுதனு மடைமையெனச் சரிக்குமவர், நன்சொலினும் மந்திரத்தெதந் நலம்வியக்கு பெரும் புராணநையா னுன்னு, மின்சொனிறை யனுபூதி யேல்சீகழ்சித் தாந்தமென வென்னு நூலிற், றென்சொலினிற் சிறந்துளமற் றையநூலிற் பாக்களவை திரட்டி முன்றில்.

சீர்—வன்னைக்கூறுந் தாளவகைகளும். தானம் - தன்னுமை. முடங்—பண், பாணி, தூக்கு இவற்றின் குற்றங்கள். சர் நாற்கலை—எட்டுக் கலைத்தொழில்கள். அவை: பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு. என்பன. எழிழான்று — இசைக்கரணம் எட்டு. அவைபாவன—வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை யென்பனவாம்.

என்னவரும் பாடமிசை யன்றியே நனவியம்பு மிசைகள் காட்டி, யன்னவதிறைச் சரப்படுத்திராகதாளங்களொடு மிசைத்து ஞாலம், என்னவோ விப்புலமை யென்றும்போங் கண்டிலமென் றிரும்பூதெய்த, மன்னவைத்த முதுக்குறைவுக் கென்செயுமில் வுலகமது மற்றோர் பாகம்.

நரம்பியல்சக் கரக்காதி கடகமிசை யருந்தமிழி னல்லராகஞ் சரமவற்றி னன்பெண்முளை முன்னுளம் பிரமாணங் காலஞ் சாரந், தரங்கிரியை சாதிகளை வகைவிடு தானமொடு சாக்கியாவும், வரங்கிடக்குஞ் சகக்கிட்டான் சங்கித சந்திரிகை வாழ்க வன்றே.

திருமயிலை வித்துவான்
ஸ்ரீமான். சண்முகம்பிள்ளையவர்கள் பாடியது.

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

தானமருும் பூங்கொன்றை க்கின்சடையெம் பெருமானின்
றனகருணை யிற்பானைற் கன்றுதிரு முகமுதலீத்
தானுறுகி யிருந்தியந் தனைவேட்பக் கைநீட்டும்
வானவரம் பன்காக்கும் வளநாடம் மலைநாடு.

இந்நாட்டி னிறையெவ விருந்தடத்த புழக்கை யிவர்ந்
தந்தாணம் மாநூரர் பெருமானே டகன்கயிலை
மன்னுருஞ் சிலம்படைந்த வள்ளியோன் றமர்கண்ட
தென்னுரும் பொழின்முதார் சேலசக ராமன்றே.

இன்னகர் வயினெம்மை யாளுடைய விலங்கயில்வேன்
மன்னுசூரந் தொருகுமரன் மயிலுனகக்குந் தனிமுதல்வன்
தன்னுடைய வனுசர்வழி தாரணியில் வந்தவனிறைவன்
பொன்னடிக்கண் புகூற்றுசுக வனநாதப் புண்ணியனே.

இனையபெருந் தகைபுரிந்த விருந்தவப்பே றெனச்சாலக்
கனைகடல்சூ ழுலகொருங்கு களரயவவதரித்தனரால்
தனையனையமகாரிருவர் தமின்மாரி யப்பனெனப்
புனையுமபி தானத்தோன் புண்ணியமே திரண்டனையான்.

பிற்றோன்றல் குணஞ்செயனும் பிறங்குந்தன் பேர்க்கியைய
முற்றோன்றும் பெற்றியினிம் முதுலகிலுடையவனைப்
பெற்றோர் மாணிக்கமெனப் பேசினர்மற் றவன்சீர்த்தி
பெற்றேயென் னொருநாவாலெடுத்துரைக்குந் தகைத்தன்றே.

முத்தமிழ்க் கொருகுறுமா முனிவனிலக் கணம்பகர
இத்தரணியி னன்னலற்றி னியலாளுப்புலமைமலி
வித்தகத்தொல் காப்பியனே யுள்ளிட்ட மேதகையோர்
சத்தநூல் வளர்த்தனர்மற் றவைவழக்குச் சமழ்ந்தனவே.

இமைய வரைத்தடஞ்சிலையாச் செங்கையிற்கொண் டோங்குகிற்கு
முமைமணவா ளனுமிசைக்கே யுள்ளுருகுமென்றுன்றோர்
அமையவுரைத்தன ரேனு மருகவழக்கஃதோர்ந்து
கமையினிசை நனிநிறுத்தக் கடைப்பிடித்து மரபினால்

அருகிய வழக்கத்தா மவ்விசைநா டகக்கடமிழ்
பெருகிய சிரிசைதன்னைப் பெரும்புவியோர் நனிபயிலப்
பரிவினொடிஞ் சங்கீத சந்திரிகை யென்பகரக்
கருதியொரு நூலிஞ்ஞான்று கழறினன்றன் னெடுத்தம்மா

விளரிமுத லேழ்சுரமும் விளம்புமவற் றின்வகையும்
வளமலிதா ளங்களொரேழ் வகையுமவற் றின்விரியும்
பளகறுமி ராகப்பிரத் தாரக்ரம மும்படிமேல்
உளவவையிற் றின்வகையு மோங்கங்கப் பிரத்தாரம்

என்றுசொல்லப்படுவனவு மிலங்குறுசந் தாங்கமுமற்
றன்னுகிற்கு மிவையனைத்து மொருங்காடியிற் செறித்த
நன்னர்பொரு ளெனச்செறித்து நம்மனோர்க் கெழிலியெனத்
தன்னமில்பே ருதவி செயத்தாரொருகைம் மாறுளதோ.

புதுவை மகாவித்வான்

ஸ்ரீமான். அ. பெரியசாமிப்பிள்ளை யவர்கள் கூறிய

விருத்தம்.

இயனிறைந்த சுகவனமா லிழைத்ததனாற் பாற்கடலின் வினிது தோன்றி, யெனிறைந்த சேலமதின் மாணிக்கப் பெயர்புனைந்த மதியமொன் று, பயனிறைந்த வமுதமெனச் சங்கீத சந்திரிகை பரப்பிரல்ல, செயனிறைந்த வுலகிலோர்கள் சிந்தைமிகக் களிதூங்கச் செய்தன்றே.

இஃது

திருநெல்வேலிச்சில்லா சேற்றூர் சமஸ்தான வித்வான்
ஸ்ரீமாந் - இராமசாமிக் கவிராஜரவர்கள் குமாரரும்,
கம்பராயணம் ஆரணியகாண்ட உரையாசிரியருமாகிய
ஸ்ரீமாந். எம். ஆர். கந்தசாமிக்கவிராயரவர்கள் சொல்லியது.

நீர்சேரும் பொதியவரை நேடினருங் குடமுனிக்குக்
கார்சேரு மணிகண்டக் கடவுளருள் புரியுமுன்பே
சீர்சேரும் படியிருந்தத் தெய்வமுனி யாற்சிறந்த
வேர்சேருந் தமிழ்மூன்று மியலிசைநா டகமென்ப.

அன்னவற்றி னுதியந்த மாயவிய னாடகக்கு
நன்னரின்றி யமையாமை நடுவிருந்து நனிதேற்றுந்
தன்னிகரி லின்னிசையின் றன்மையென வுரைவரைத்தோர்
மன்னுதமிழ் முச்சங்கம் வளர்மதுரைப் பாணர்பிரான்.

வெட்டேறப் புரிந்துதந்தி மீட்டுமிசை கேட்டவுடன்
மட்டேறுங் கடுக்கையணி மணிமுடியிற் றுணைவிறகுக்
கட்டேறப் புனைந்தரியுங் காணாத பதம்புவியிற்
பட்டேறப் பரமன்வரும் படிபுரிந்த பண்பினதால்.

எண்ணுறுமிவ் விசைத்தன்மை யெடுத்திசைக்குந் தமிழ்நூல்க
ணண்ணுபெருங் குருகுபெரு நாரைமுத லியவென்ப
பண்ணுறுமிப் பெயர்கேட்கப் பட்டவலா லினையவெனக்
கண்ணுறுவான் முயன்றனநீர்க் கரையினன்றிக் கண்டிலமே.

என்புரிவா மெனவிரங்கு மிஞ்ஞான்று நல்வாணர்க்
கன்புருவாய் வந்தெனச்சீ ரமர்சேலத் திருநகரிற்
பொன்புரிவா மெவர்க்குமருள் புண்ணியவான் சுகவனப்பேர்
மன்புரிமா தவப்பேறு வாய்த்தெனத் தோன்றலுற்றான்.

கம்பனிவ னெனப்பாடுங் கவித்திறமு நாத்திறமும்
பம்பியுறுந் தமிழ்க்கடன்மாம் பழக்கவிச்சிங் கேறுமுத
லம்புவியிற் பலபுலவ ரன்பெனுமோர் பெருஞ்செல்வச்
சம்பனனு மாரியப்ப சரசமா திருந்துணைவன்.

ஆங்கிலமு மாரியமு மாந்திரமு மமுதெனினும்
பாங்கிலவென் பசுந்தமிழும் படித்தறிந்த படிநடப்போ
னேங்கிலவ னேதகத்தி னுவர்நீக்கிப் பொழிபுயல்போ
னுங்கிலவ ராகமே நல்குபெருங் கவிகையினான்.

இலகுறிவுச் சட்சிகளு மிலற்கலைக்கட் டருமறிய
நலவறிவுச் சட்சின்றி நவில்கலைகட் கிங்கட்கனுர்
கலகமிலை மெய்விரித்துக் காட்டியுப காரசாட்சி
நிலைகுலவும் பஞ்சபுரிசி யாய்தர்க்க சுசிவனத்தான்.

மாமணியி னொளிகாணும் வலியதெனச் செய்யுள்களிற்
றேமிவிரா கந்தாளக் துன்னியுற்ற தொன்மைகண்டு
பூமியிடைப் புதையல்கண்டார் போற்புலவர் களிதூங்க
வேமமுட னெடுக்கவியு மின்னிசையாற் றனிதுய்ப்போன்.

கற்றவர்சூழ் சமுகத்தான் கமழும்வன சமுகத்தான்
கொற்றவர்மெச் சுந்தரத்தான் குலைவுபெருஞ் சுந்தரத்தான்
பொற்றருவாய் கற்பகத்தன் புகழ்பெறுசங் கற்பகத்தன்
மற்றுமுப்பர் திருநாமன் மாணிக்கத் திருநாமன்.

எந்நாளு மிசைபெறுதற் கின்றியமை யாதவொன்று
முன்னாக்கி செயமனத்தின் முன்னிரிசை பயில்வார்கள்
பன்னாளுந் தனையுள்கும் படிபியற்று மொருநூலின்
றன்னுமஞ் சங்கீத சந்திரிகை யாமிதுதான்.

முப்பகுப்பிற் றன்னவற்றின் முதற்பகுப்பிற் சப்தஸ்வரம்
பெட்புறுமச் சுரபேதம் பேதசுரப் பிரஸ்தாரங்
கப்பவிலி ராகப்ரஸ் தாரமெழு பத்திரண்டா
வைப்புடைய மேளகர்த்தா மற்றவற்றின் பிறப்பவற்றில்

பிறந்தநாகஸ் இராகம் பெறுமாரோ கணத்துடனே
புறந்தவவ ரோகணமு மொன்றுவர்ச்சா வர்ச்சமுமாச்
சிறந்தவிரா கத்தியல்பு செப்பியே சதிக்யான
மறந்துவரும் வினைகன்கு வாசிக்கும் வழிகாட்டி.

மறுபாகத் தினினன்கு வருமேழு தாளங்கள்
பெறுமவற்றின் விரிவவற்றின் பிரஸ்தாரஞ் சப்தாங்க
முறுவிவ்வை மற்றவவை புற்றபிரஸ் தாரமுமே
மூவிவுறுமே யேழ்நாற்றெ டுத்தமுக்காற் சதமென்னும்

தாளங்க ளுறுவிரை சக்கரமுந் தீற்றெட்டுத்
தாளவிவ ரமுமவைக்கு காரணமா மணிகளுநன்
மேளகர்த்தர்த் தொகைக்கான விவரமுத லாம்பலவுஞ்
சுளுடையார் தம்முடியுந் துளக்கும்வகை விளக்கியபின்.

கடைப்பாகத் திந்நூலிற் கருத்துவைத்துப் பயில்வார்கொ
ணடைப்பாகம் பிறப்பலவு நனிவிளங்கக் காட்டினனிக்
கொடைப்பான்மை மாணிக்கக் கொண்டலிசை கங்கைபுனை
விடைப்பாகன் திருவருளான் மேன்மேலும் வாழியவே.

கதிகொடுக்கும் படிகால காலன்மலர்க் கால்பரவித்
துதிகொடுக்கு மாணிக்கத் தூயதமிழ்க் கடற்கேன்று
மதிகொடுக்கப் போந்திலகு மகிழ்ச்சிகொளப் புரிதலினித்
ததிகொடுக்குஞ் சங்கீத சந்திரிகைப் பெயர்த்திந்நூல்.

இன்னிசையு மிந்நாலு மியற்றினனுஞ் சிறப்பெய்த
நன்னிர்க்கா ளச்சியற்று நவிற்றுமிந்நா லியாத்தவற்குந்
துன்னுபெருந் துணைவனெனச் சொலப்பெறுஞ்சீர் மாரியப்ப
முன்னவனும் பான்கருணை முற்றுமுற்று வாழியவே.

நாகூர் தற்காபுலவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ வா. குலாம்காதிறு நாவல ரவர்கள் இயற்றிய
விருத்தம்.

விரிகடல்சூழ் நெடும்புவியி லகன்பரத கண்டத்து விளங்குந்
தொல்லை, சரிகமப தநியென்னு மக்கரத்தானிகழிசையைச் சார்தா
ளத்தைத், தெரிகடலிற் பெருநாவாய் பெருங்குருகை யோதேடித்
திரிவே மொன்று, புரிகவொருபடித்தாறு லென்றுசில கனவான்
கள் புகழ்ந்து வேண்ட.

பாடாத நரப்புவிசி யிருபத்தொன் றிரண்டிலது பதினேழிற்
கோடாத கவின்பேரி மகரஞ்ச கோடுஞ்செங் கோட்டியெவ்வு
வாடாத யாழ்நான்கின் வெகுராதி யாலியற்றும் வங்கியத்தின்
சாடாத் தண்டத்தின் வழிப்பயக்கு மிசைமுழுதுந் தனித்காட்டி.

காட்டிறம் பண்ணென்ற வாளத்தி புடனேரோ கணமும் மற்
றை, நாட்டுமவ ரோகணமு மினையவென நனிதெளிய நன்குகாட்
டிப், பாட்டுவகை பிறழாமல் வரப்பியற்றிப் பலவிதிகள் பூப்பிப்
பின்னர், மாட்டுவருங் கொட்டசைனுக் களவென்ற தாளத்து
வகையு நாட்டி.

தாங்குமிசை விதிவல்லோந் தும்புருவே யெங்கிதனைச் சொன்
னெனென்ன, ஏங்குமிய வினதாகச் சங்கீத சந்திரிகை யெனும்பேர்
வைத்து, வரங்குமிசை யினைத்தென்ன வறியாருங் காந்தருவ
வகையாராகத், திங்குதபு மிந்நூலைச் சொலற்கரிய விதமாகச்
செய்தானம்ம.

ஈங்கிலோ தமிழ்ப்பாஷையினிற்றெலுங்கு பாஷையினு மெங்கு மில்லோ, ஆங்கிலேய பாஷையினு மாங்கிலேர் கிணையிசையாலருக வென்றூ பாங்கிலேர் குதர்சிரக்கம் பத்துடனல் வாயாரப் பாங்து வாழ்த்தும், திங்கிலோர் நடுமணியாய் விளங்குமொரு திருவளரச் சிறந்த நம்பி.

தகைதீர்க்கு நீதிவிசாரணைத்தலத்து நியாயதுரந் தரனுமின்று, பகைதீர்க்கும் வல்லவனென் றெண்டிசையும் பரவுபுகழ் படைத்தோன் மானு, மிகைதீர்க்கும் வளஞ்சான்ற திருச்சேல மெனுநகரில் மேன்மை வாய்ந்த, நகைதீர்க்குங் கீர்த்திபுனை சுகவனமா லினிதளித்த நன்மைப் பாலன்.

பாணிக்க முடியாத விரத்தினந்தா னிவனென்று புலரும் போற்றிப், பேணிக்க வனமறவே கொண்டாடு துகுதியெல்லாம் பெற்றிருன் னார்தா, ஊணிக்க வனமடையப் பிரகாசித் திடுமெரியா னசனை யில்லா, மாணிக்க மதிபனெனுஞ் சங்கீதா சிரியனும் வன்மையோனே.

அத்தகைய வருமந்த நாறன்னை மாற்றரிய வச்சி லாக்கி, எத்தகைய வழியாருமெளிதறியப் படுத்துதும்யா மென்று செய்தான், முத்தகைய வெந்நாற்கு கீதிமாரி பொழிந்துதவு முதன்மையாளன், இத்தகைய னெனத்திருநா லாக்கியோன் சோதானு யிலங்குகிரான்.

பெறுமிலவு கான்றமுதச் சுகவனமா லினிதாகப் பெற்றமைந்தன், குறுமிலமன் னவர்பலருங் கொண்டாட வருங்கருணைக் குலமாணிக்கம், மறுமிலவுமனப்பகைஞர் வணங்கிவழி பட்டியற்றும் வல்லஇங்கம், வறுமிலமும் பட்டினமாய் வளம்பயப்ப விச்சேலம் வாழுஞ் சீலன்.

இல்லாமை தெரிவிப்பார்க் கில்லையென்று சொல்லாமடியுங் கன்னன், கல்லாமை புண்டயாரைக் கனவிடத்து நேரியாத் கலாபிமானி, தொல்லாமை முதலாய தபனியல்பூண் டினிதொழுகுங் குணமால் செல்வம், எல்லாமை யந்திர வந்துகுடி யினிதிருக்குமிருங்கு பேரான்.

மாருத வெழில்படைத்து மன்மதனே யிவனென்று மயக்க வந்தோன், சீருத்தநற்குணத்தான் கலைகல்வி யினுந்தேர்ந்த சீமான் குற்றங் கூறுத வொழுக்கமுளா னுபகார மெனுமாலை குலுங்குந் தோளான், தாருத கீர்த்திமலி மாரியப்பு முதலெனுந் துரையாமன்றே.

சென்னைச் சைவசித்தாந்த சஞ்சீவி சபையின்
கௌரவ அக்கிராசனாதிபதி ஆகிய
ஸ்ரீமான் நே. பாலசுப்பிரமணியமுதலியார் **M. A.** அவர்கள்
இயற்றிய

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

எவ்வுயிர்க்கும் பொதுவாகி யெங்குமிருந் தென்று
மெல்லாமா யல்லவுமா யின்பமதாய்த் துகளிச்
செவ்வியகல் லறவின்பக் கொருபொருளை நேரச்
சீர்மிகுத்த வியற்றமிழ்க்கு நாடகக்கும் வேண்டு
மவ்வியமில் பொருளாகி விந்துவினிற் றோன்று
மவற்றுணம் பரசிவத்தி னழகுமொலி யிசையி
னெவ்வியசங் கீதவிய லிக்காலக் கேற்ற
வுதவுமொரு சந்திரிகை கண்டுவகை யுள்ளோம்.
நாயகமாய் முதலியார் தங் குலத்துதித்த
நயமிகுபல் விசையுணரு நயத்தின் மிக்கான்
றாயவள மலிசேலத் துறைமாணிக்க
சுந்தரனு வலர்மதிக்குஞ் சுகுணமேலான்
பாயவளர் செவிக்கினிமை பயக்குங் கீதப்
பண்புறுமிவ் வருநூல்பற் பலரும் வேண்ட
நேயவட மெழிநடப்பத் தவக்கி யின்ப
கில்லுபசுத் தமிழ்மொழியா னிறுவினனே.

சேலம் முனிசிபல் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான் சரவணப்பிள்ளை யவர்கள் இயற்றிய
விருத்தம்.

சுகவனந் தவனுஞ் சுகவனத் தவனுஞ் சுகவனத் தவனுந்தானைகுஞ், சுகவனத் தவன்போன் மலரடிபணிவோன் றக்கலைமுகிலருள் பாலன், சுகவனக் கவிஞர் விழைமழை நாமந் தோன்றல்பின் னுதித்தவன் மலர், சுகவனப் புறவே வீணையமர் வினிக்கத் தாயபேர் படைத்தசீ ரியனே.

தந்திரிகை யாற்றடவிச் சரிகமப தகிப்பாடல்
முந்திரிகை யும்பிற்றா முறையர்ழிற் பயின்றுதிய
மந்திரிகை யற்றெரித்த வளங்குலவு சங்கீத
சந்திரிகை யாவரையுஞ் சகோரமெனப் புரிந்ததுவே.

கோயமுத்தூர் ஜில்லா காங்கயம்
ஸ்ரீமான் அஷ்டாவதானம். வே. சேஷாசலநாயுடு அவர்களியற்றிய
சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பூமேவு தேறல்மிகப் பொங்கிமண்ணிற் படிந்துறைந்து பெலிகண்டங்கள், மாமேவு வயிரமென வயங்குபழனிப்பதியில் வாணிதன்னை, நாமேவு கல்வியிலிந் நாட்கம்ப னென்றபெயர் நாட்டுஞ் சீர்த்திப், பூமேவு கவிச்சிங்க நாவலனென் றொருபெரிய பட்டந் தன்னை

வாதுபதி மன்கத்தினரை வாட்டுஜெய சிங்கமுயர் வண்மை தன்னி, லேதுபதி ஞாலகி லிவர்க்கிணையென் னும்புகழான் இணையில்லாத, சேதுபதி சமூகமெச்சித் தரவடைந்தோன் றன் பெயரைத் தினமுஞ் சிந்தித், தோதுபதி தருங்கவிசொல் லும்படிசெய் மாம்பழப்பே றுடைய மேலோன்.

தனக்கொருயிர்த் தோழனவன் சிங்கார மாரசமஞ் சரிக்கு நல்விற், பனத்துடனே பொழிப்புதவு முரையர்சா னவனாலே பரீட்ப்பட்ட, இனத்தழிழை யச்சினிலிட் டிசைகொளுவான் சுகவனமா லின்றசேயன், மனக்கினிய மாரியப்ப மதியூகி தனக்கினிய மணியாழ் வல்லான்.

ஆணிக்க னகத்தாலே யிசைத்துமணி குயிற்றுமதி ளரணம் விண்ணோர், காணிகீகப் பாலுமுறக் கண்ணிமையா தக்கவினைக் கண்டுசீரைப், பாணிக்கப் பலவுடுக்கள் படிதுலிறைற் சேலமெனப் பன்னுமூரில், மாணிக்க மகிபனுயர் வாணிக்கோர் குடிகையாய் வயங்க மாதோ.

சத்தசுத்த சுரங்களும்சேர் டசசுரசை யோகங்கள் தருமீராறு
சத்தசுரத் தானங்கள் சுரநாமக் காரணங்கள் சோடசத்தி
லொத்தசுரங் களுக்குக்கக ரணந்துவாத சச்சுரங்க ளுயருமக்கா
ணத்தணிந்த காரணஞ்சோ டசசுரசை யோகத்தி னக்ரமத்தின்.

காரணமுஞ் சுரத்தினறு பேதமுஞ்சஞ் சாரத்தைக் காட்டும் பேதம், சாரமிகும் ஸ்தாயிகமு கங்களக விம்சதிஜாச் சனைகள் மற்றும், பாரதுவா விஞ்சதியின் சுருதிகள்வி ளையைமேளம் பன்னு யாறும், நாரசுரப் பிரஸ்தார மதின்கிரமம் ராகப்ரஸ் தாரமின்னும்.

சரிமேளக் கர்த்தாவின் காரணமும் யிரம்பிரிவாம் சன்யராகம்,
விரிவான தாளமதின் பிரமாணம் சத்தாங்க விபரமேனும்
பரிவாக யதிகாம தேயக்கா ரணம்எழுமுப் பத்தைந்து தப்பால்
புரிநூற்றெட்டெழுபத்தைந் தலக்குரியசக்கரமும்பொருத்திமேலே.

பலவகையாங் காளத்தி னலங்காரம் விவரமுடன் பகர்ப்ரஸ்தாரம்
இலகும்னு தாரிதந்து ரிதந்தரித சேகரமோ டிலகுமற்றும்
குலவுகுரு புளுதக்கா கபதஞ்சை யோகமிவை கூடியின்றே
நிலவியமே ருச்சக்க ரங்கள்முதற் பலவிபரம் நிறம்பத்திட்டு.

சங்கீத சந்திரிகையென் றபெயர் புனைந்தொருநூல் தந்திட்டானால்
இங்கிதன் பெருமைதனையெவர் வியனரியாழ்முனியும் இனிய தும்பு
ருங்கீத சாரமுணர் விஞ்சையரு மிதன்சாரம் நுகர விந்நால்
எங்கீத ரந்தெரிவா மெனகீதமும் வேண்டுவரே வியப்பிலியாதே.

நெடுநாளா மிசைத்தமிட்கு நிறைந்தவிலக் கணமில்லையின் நிலத்தி லென்று, தடுமாறி வருந்தினர்க்குச் சஞ்சலமாம் பேரிருளைத் தடியக் காந்தி, யொடுகீதப் புலவர்கடம் முள்ளமெனும் பூரலாழி யுவந்து மேற்பொங், கிடுமாறுயச் சங்கீத சந்திரிகை யுதித்தெழுந்த திலங்கி மாதோ.

செந்நையிலிருக்குந் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான் காஞ்சீபுரம். இராமசாமிநாயுடு அவர்கள்
சொல்லிய விருத்தம்.

பெருநாரை பெருங்குருகு முதலியதம் பெயர்க்கேற்பப் பிறக்க மாயி, யிருநாலு மாதிரத்து மிசைந்துபறந் திடச்செலுத் தெழில் பெற்றோருக், குருநாலு கானிசை நா னரலெயனு மாணிக்கத் தனிப்பே ரோன்செய், குருநாலு, சங்கீத சந்திரிகை யோன்மை யெவர் குணிக்கற் பாலார்.

ஆணிக்க நகவில்லாற் கடிமைபூண் டொழுகியநல் லருந்தவத்
தால், நசணிக்க மதனுறுநஞ் சுகவனத்தே தோன்றியென்று
நனியி லங்கும், மாணிக்க மொன்றுவெயி றருதறவிர்ந் திம்மகி
யோர் மகிழுமாறு, பேணிக்க வின்செயுஞ் சங்கீதசந்தி ரிகைதந்த
பெட்பு நன்றே.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமான் ஊக்காடு இரத்தினவேலுமுதலியா ரியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பூமகளும் பகமென்னப் பொலிசேல நகரதின்முப் புரம்பொ
டித்தோன், வாமமுறு மலைமகள்கா னூபுரத்தின் வருவீர வாகு
சீர்த்தி, யமரபி லங்குதித்தோன் சுகவனந லபிதான மடைந்த
தோன்றல், சேமமுறச் செய்தவத்துப் பயனெனவே யிவ்வுலகிற்
செழிந்த சீரர்.

மாரியப்ப மகிபனெனும் வாய்மையன்பிற் றோன்றியோன்
வந்திலென்னுஞ், சீரியலெள கெழுடையான் றன்னளியான் சிவ
பதமே சிந்தைசெய்வான், கூரியமா மதியுடைய மாணிக்கக் கோபு
லவர் குதுகலிக்க, ஏரியல்சங் கீதசந்தி ரிகையிந்நா ளீந்துபுக ழே
ற்று னன்றே.

கட்டளைக் கலித்துறை.

சீர்சங்ககிரிச்சுகவனமாரியப்பந்தினன்பின்
னேர்வேந்தமாணிக்கத்திங்களுலகிருணீக்கிவிடப்
பார்மிசைச்சங்கிதசந்திரிகைதன்னைப்பரப்பியதால்
ஆழிக்கசங்கீதம்வல்லசகோரங்களார்த்தனவே.

சென்னை அஷ்டாவதானம்
ஸ்ரீமான் பூவை. கலியாணசுந்தர முதலியாரவர்கள் இயற்றிய
விருத்தம்.

வடமொழியி னுந்தெலுங்கினும்மாக நனிதேர்ந்த வன்மை
யாளர், அடீழகி னிதுபோலு மொருபனுவ னம்மவர்களந் தோ
செய்யா, கிடரடைந்தா ரெனநெஞ்சி லேகித்துமென்னியென்னி
யேக்கங் கொண்டு, படாழ்ந்தா றங்கடைந்து மந்தரங்கத் தேபுக
ழும் பாண்மை கொள்ள,

செந்தமிழி னயமுடனே யலங்காரச் சுவையணைந்துந் தேர்
ந்த மிக்கோர், இந்நாள் வரையினினம் மொழியதனி லிருந்த
குறை யிரியப் பெற்றோருஞ், சிந்தைமகிழ் வடைந்தேமா லெனவுன்
னிச் சிறப்பணைத்துந் திகழ்தற் கேற்ப, முந்தியசங் கீதசந்திரிகை
யினைக் கொண்டாடி முடிமேல் வைக்க.

திகழ்சேலத் தொளிர்திலக மாஞ்சுகவ னக்கோமான் சேயரி
யக் கற்றோர், அகமகிழ வார்த்தைசொலு மாரியப்ப மேலோன்
பின் னவத ரித்துச், சகமதில்வக் கீலுத்தி யோகத்தி லேசிறந்து
சங்கீ தத்தில், மிகுபுலமை வாய்ந்தமா ணிக்கவிறப னன்சொற்று
வியக்கற் பாற்றே.

திருக்கயிலாசபரம்பரைப் பொம்மபுரம்
ஸ்ரீ - சிவஞான பாலைய தேசிக ராதீனத்துச்
சிதம்பரம்-ஈசானியமடம்
ஸ்ரீமத்-இராமலிங்க சுவாமிகளவர்கள்
மாணாக்கருள் ஒருவராகிய
ஸ்ரீமான் க. வ. திருவேங்கடநாயுடு அவர்களால் இயற்றப்பட்ட
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நறைமணந்த நறுங்கொன்றைச் சடைப்பெருமான் றலை
நின்று நன்குபோற்ற, விறைமணந்த சங்கத்து ணிவ்வுமும்மைத்
தமிழின்க ணிசைதா லிந்நாட், குறமணந்த தென்றருமை றுறை
ந்திடவே சிறார்களுநன் குணர்வா னுன்னிப், பொறைமணந்த சுக
வனப்பின் னுயக்குரிசில் செய்தவத்திற் புவிக்கண் வந்தான்.(க)
மாரியப்ப வள்ளலினுக் கினியவனு மாணிக்க மகிப னன்மை
சீரியநா லுணர்வுடைய தெள்ளியோன் களிகள்மகிழ் செஞ்சொல்
பேரியலுஞ் சங்கீதசந்திரிகையென் னுமொருபெட்புமிக்கநூலனைன்
தேரியநா லினிதளித்தான் சேலநகர்ச் சிலன்சீர் திகழ்த்தலதே.

திரிசிரபுரம் இலக்கண வித்தியா[illegible]
[illegible] து. கா. சிந்தை [illegible] இயற்றிய.
அகவல்.

ஏழ்சுரநிரைத்த யாழ்மறைக் கடலில்
வெண்கதிர்த்திங்கள் காணிய பட்டாங்

கோவறு திறத்த தெருநாலது தான்
றுவிலின்பத்துத் தலையாயிஞ்ஞின்ற
திமைக்குஞ் சங்கீத சந்திரிகையென
வமைக்குந் துவத்தினன் யாரெனிற் கூறுதும்
யாழ்வேதியர் நலம் பாழ்படுத்தவர் தம்
திருகாமுச்சி கூப்பினர்தொழீஇப
சாலப்புகழ்வளர் சேலப்பதியிற்
சுகவனசீமுகனன் மகவெனத் தோன்றித்
தந்தைதீமகற்காற்று முதவியின் முந்தி
யதாஅன்று
துறைத்தனகியாய நிறைத்தசாலையில்
வாயதுவெலச்சொன் னையதுரந்தர
னறந்தலைப்பட்ட நான்கினுமுறையே
யிறந்துகடைபோகு மியல்பிற்கெடாஅ
மாணிக்கமகிப னெனப் பேணிய
வுலகெலாந்தன்பெய ரிலகியோனே.

வெண்பா.

ஏழ்பட்ட பல்வகைய வின்னிசைபு மைந்திணையாற்
போழ்பட்ட வேழ்வகைய தாளமும்—சூழ்லைய
மன்னியமுப்பால காலமு மிந்நாற்
சொலற் பாலவல்ல பிற.

தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான் சே. து. விசாகப்பெருமாள் முதலியா ரவர்கள் இயற்றிய
நேரிசை யாசிரியப்பா.

கடல்விரியாடை கவினுறவுடீஇ
யுடல்கெழுமன்னுயி ரடங்கவயங்கிய
மாநிலத்தன்னின் மன்னர்மதித்துத்
தேனிறைமாலையொடு செம்பொன்மாலையு
நல்கிடுமாட்சியெஞ் ஞான்றும்விளங்க
மல்கியகவிவலர் மூன்றுமிசைவலர்
யாவருமெச்ச மாவளமிருந
நூலினிற்றெளிவாய் நுவன்றவொண்பாவுந்

சால்பியலிராக் தாளமெழுனமுன்றி
லெத்திறத்தார்க்கும் இன்னமுதூட்டு
மத்திரப்பாகத் தாயபின்னிரண்டும்
பாமரபண்டிதர் பற்பலர்தேறத்
தோமறுமிசையோர் சொற்றகளாநிதி
பாரிஜாதம் பகருமேலாசன
மூரிநன்னும மூலமாயியற்றிய
விசைநூற்பொதுள் விருப்பினும்விரிவா
யிசையாதிருத்தலி னெங்கணும்பரவ
காதஞ்சுருதி நயசுரந்தாள
பேதந்தெரிவண் பிரஸ்தாரவகை
முதனூல்வழியே முறைபிறழாம
லிதமார்விபஞ்சி யின்னிசைதழீஇக்
காலிகிதத்திற் கண்டவழுக்களைந்
திரசமேலிட வெழுதுபுநிறைவாஞ்
சங்கீதசந்திரிகைப் பொங்குபேர்நூலினன்
வாணியினருளான் மாயிருஞாலம்
பேணிப்புகழப் பிடையாழினும்
விரைவேதாந்த மினிர்கித்தாந்தக்
கைதான்தசையினுங் கசடறுதேர்ச்சியு
மெலருமுணரா வியற்றமிழ்க்குரிய
நவைதவிர்செய்யு ளானிகத்தின்
றுள்வகைப்புஞ் சரிவரக்கண்டு
நீள்விசைக்க நேருந்தேர்ச்சியு
மாந்திரமிங்கிலீ ஷ்ராசக்கேற்ற
தாந்திரச்சட்டத் தமையுநற்றேர்ச்சியும்
வாய்ந்திரண்டாங்கிரேட் வக்கீலென்ன
வாய்ந்தபுகழ்பெற்றித் தன்தபி தானத்தி
னொளிபுறம்புவியி லொளிரப்பெற்றோன்
சுகவனவாவி சுகவனமேவிச்
சுகவனநாதர் துலங்குஞ்சேலச்
சுகவனமாறருந் துகடீர்தநயன்
அகமலர்மாரி யப்பமாசுமுகற்

கனுசனுகி யடியர்த்தாழ்ந்து
நனியலர்கொடுநேர் நாடொறுந்தூஉய்த்
துதிபுரியமஞ் சேர்வநநெஞ்சிற்
பதிமாணிக்கப் பெயரினன்
என்னுமாமுகிலா மன்னுமாண்பினனே.

அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

பேணிக் கமைந்தரச மிணையாகா தெனவுலகர் பேச வொப்பில்
வாணிக்க கிலீமதிநேர் யாழ்மீட்டிச் சுவையூட்டி வரலாற் சேடன்
நாணிக்க வக்கமொடு கீழாறு னெனவிசையோர் நவிலுஞ் சீரார்
மாணிக்க மாலினிய சங்கீத சந்திரிகை வழங்கி னானே.

நேரிசைவெண்பா.

சந்திரிகை சேர்வதுபோற் சந்ததமுந் தண்பிரகா
சந்திரிகை யற்றுதவச் சங்கீத—சந்திரிகை
மாவிசையோர் கொண்டாட மாணிக்க மாலீந்தான்
பூவினின்மான் பாரும் பொலிந்து.

ஸ்ரீமான் சேலம். பா. அங்கமுத்து முதலியா ரவர்கள் சொல்லிய
வெண்பா.

இசைநூலவாவா மிருளதனைப் போக்கத்
திசைநூலாய் மாணிக்கச் சித்தில்—நசையான
இங்கிதமாக விலங்கி யுதித்ததாற்
சங்கீத சந்திரிகை தான்.

திருச்செங்கோடு - விவேகதிவாகரன் பத்திராதிபர்
ஸ்ரீமான் முத்துசாமிக்கோனாரவர்கள் சொல்லிய
விருத்தம்.

தேன்றுளித் தொளிரும் பசுந்துழா யலங்கற் றிருமரு மார்பனிற் காப்போர், அன்றநா ரதனீ வெருட்ட லுநாண மடைந்தவின் வாணிசொ லென்னி, யூன்றிடு கான வித்துவாங் கூகை யேழுபொரு ளாற்றுறம்பயுறாயத், தோன்றுமா பிரமாண் டிசைபயின் றெழிலச் சுதனைவ முனமடைந் தனனால்.

இன்னிலை நன்கு கற்றிலை யிருபத் தெட்டதாஞ் சதுர்யுக மதனின், மின்னுத்வா பரத்திற் கண்ணனா வெழுந்து மறுவிலின் னிசைபயில் விப்பே, மென்னனு மகன்று மகபதி பிரம னிடையிசை யிசைவலார்க் குறுகி, சொன்னநாட் காறு முனியுள முருகிச் சோர்விலா மற்பழ கினனே.

வீறுயருந் தருளுங் கண்ணன்மெ லடியை விரைமல ரவனருண் முனிவ, னேற்றிட சாம்ப வதிமுதன் மனையர் மொண்மர்பாலினுமிரு நான்காண், டாற்றலா யழிய விருத்திய பின்னை ரதியொரு வற்சர நனுக்கஞ், சாற்றிதும் ருக்மிணி யொடுதன்னை யென்றான் றகுமுனி யுளமகிழ் பூத்தான்.

சாதமா மிவ்வா ருமைசே ரிலிங்கந் தனியொலரு சரிதமன் னுதலாற், காதலா மலக மாவெடுத் தெளிதிற் காட்டுஞ் சிதநாலன்றுஞ், காதல் மதினு மிலையென வோர்ந்து சுருக்கமா விதைவகுத் தளித்தான், வரதனா மவனை முந்தில முயரு மாணிக்க மென்றிசைப் பாரே.

வேறு.

அணிக்க னகப்பொருவா னடியவர்க்கு மெனக்குமிக வன்பனா, மாணிக்க வள்ளலன்றே சங்கீத சந்திரிகை வகுத்துளானேல்; காணிக்க லங்காம னைதமா முனிதானே நலமாய்த் தேர்ந்து, சேணிக்க வின்புவிமெ லாமகிழ மகதியிசை செய்துவாரே.

மதுரைஜில்லா முறையூர்
ஸ்ரீமான் பழ. சி. சண்முகஞ் செட்டியாரவர்கள்
சமுக வித்துவான்
ரொட்டாம்பட்டி ஸ்ரீமான். எம். கருப்பையாப் பாவலரியற்றிய
காலடித்தரவு கொச்சகக் கலிப்பா.

நீலமணி மிடறுடையா னீறுடையா னேறுடையான்
மூலமணி யாவிளங்கு மூர்த்திசுக னப்பெருமான்
கோலமமர் திருக் கோயில் கொள்ளெழிலு மாதர்விழி
சேலமென மழகுமுயர் சேலமெனுந் திருநகர்வாய்.

சகவனப்பேர்த் தோன்றலுக்குத் தோன்றலெனத் தோன்றலுற்
பகவனடி மலர்தொழுமாம் பழக்கவிஞர் கன்புவிப்பற்ற [றுட்
மிகவனப்பின் மாரியப்ப வேள்புலவ ரியம்புவெண்பா
அகவனற்பா விளர்த்துமுன ரறிவுடையான் கிருத்துணைவன்.
நீதிக்குக் குறைசிறிது நேராம னெறிமுறையே
வாதிக்குத் திறமைபெறு வக்கீலா மதியூகன்
ஓதிக்கு நிகர்மொழியா ருருவமதன் பல்புகழான்
மாதிக்கு முழுதுஞ்சொன் மாணிக்க மெனுநாமன்.
மாலாகித் தமிழாரு மந்தரத்தா லிசையென்னும்
பாலார்கல் வாரிதியைப் பயன்பெறவே மதித்திட்டுங்
கோலாக லத்தொடுசீர் குறைவின்றி நிறைவிலவு
சாலார்ந்த சங்கீத சந்திரிகை யுதித்ததுவே.
அந்தமதித் தானமிசை யகிரிசைசி லாவிரித்துச்
சந்தமதின் இடைவல்லார் தம்மனத்தி னிருளகற்றி
மந்தமதி யுடையார்க்கு மகிழ்ச்சியினைத் திடமிதைக்கான்
எந்தமதின் பத்தினையின் டெடுத்துரைக்க வியலாவே.

தமிழ்ச்சக்ரவர்த்தியாகிய பழநிபுரி
ஸ்ரீ-ல-ஸ்ரீ மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்களின்
மாணாக்கராகிய
வித்வான் - கிருஷ்ணசாமிமுதலியா ரவர்களியற்றிய
ஆசிரிய விருத்தம்.

நீல்கொண்ட கடலாடை புடைகொண்ட புவிமீது
நிறைதமிழ் வழங் கெல்லையு
ணிற்குமிசை நூல்கிருப் புள்ளா ருளங்களி
சிரம்பவொரு தக்க நூலைச்
சீல்கொண்ட பாஷையாந் தமிழினி லியற்றிச்
சிறப்புடன் சங்கீத சந்
திரிகையென னும்பெயர் கொடுத்ததை விளக்கினன்
சேலநகர் சுகவினைத் தரன்
மேல்கொண்ட துவமெலர் முஜர்புத்ர வடிவாகி
மேதினியி லவதரித் தோன்

மேன்மைபெறு முன்சீபுக் கோர்ட்டுப் பிளீடரின்
மெச்சிடும் வாய்ச்சா லகன்
மால்கொண்ட விங்கிலீஷ் தமிழாங் கிரங்களின்
மகாபண்டி தக்குஞ் சரம்
வயிரமும் நிற்போக வொளிவீடும் பிரகாச
மாணிக்க வள்ள லுமே.

இந்நூற் பிரசுராதிபர் முருகரும், கதாமஞ்சரியின் ஆசிரியரும், சென்னை சந்திரிகாபிரெஸ் தலைவருமாகிய

பு. வே. சபாபதிமுதலியார்
விதந்துரைத்த அகவல்.

திருவளர் புவிக்குத் திலதம தாகும்
பருவரா லுகளும் பாசடை வாவிக
ளெங்குஞ் செயிக்க வெழிலுடைப் பொழில்க
ளெங்கும் வாய்ந்த வாம்பல துறையுடை
சேல நகராந் திருவளர் பதியான்
பாவலர் தமக்குப் பருவிருந் தாவான்
ஆனநாற் கவிசொ லரும்புல வர்க்கும்
ஏதமில்கீத மிசைபுல வர்க்கும்
சங்கர னடியைச் சாரடி யர்க்கும்
பங்கப் படுத்தும் பசிப்பிணி யடைந்து
சங்கை யடைந்த சால்பி லவர்க்கும்
கருவை தீர்த்த காவலு மையான்
பரவை நிகர்த்த பாரப் புகழான்
வள்ளிக் கொடிபோல் விள்ளற் கரிய
கொள்ளுங் கிளைக்குக் கொழுக்கொம் பானோன்
ஆங்கில முதல வாம்பல கலைக்கடல்
நீங்கிடு வாயால் திகழக் கடந்தோன்
இம்மாண் புகழுடை யம்மா னொரும்
பெம்மன்மா ணிக்கப் பேரா சிரியன்
யாத்தசங் கீதசந் திரிகை யாமெனப்
பேர்த்த நூலைப் பெரிதுளங் களித்துப்

போற்றிக் கற்போர் புலமைய ராகித்
தேர்ந்தொரு திகழ்வ தன்றி
ஏற்றுமா சிரியரா யிருக்க லாமே.

இக்கிரந்தகர்த்தாவின் சகோதரராகிய
ஸ்ரீமான் சே. மாரிய முதலியாரவர்கள் இயற்றிய வாழ்த்துக்கவி.

கொச்சகக்கலிப்பா.

திருவளரு மினியதமிழ்த் திசைமுழுதும் பயனெய்த
மருவளரு மிசைநூலுள் வழங்கரிதா மெளியோரும்
பருவமரும் விதியோடு படித்தறிவு பெறும்பொருட்டே
பொருவரு மரியநூ லுரைத்தவ னெனவெண்ணி.
பயிலெழுத்தோ சேர்வழியிற் பலவகையாப் பிரிந்தமரும்
மயிலாதி யோசையுடன் வருங்குரலே முதலான்
1 இயலிசையி னத்தனைய மெழுவகைத்தா ளமும்வகையுங்
2 கயிலமரு மாமலகக் கனிபோலக் காட்டியே.
மாற்றரிய விகற்ப வைத்தமைத்து வல்லவராற்
சாற்றரிய சங்கீத சந்திரிகை யெனப்பெயரிட்
டேற்றரிய விந்நூலை யினிதியற்றி யன்களித்தான்
வேற்றரிய விதம்போக விளங்கிவரு மென்றம்பி.
முடிக்கூறு நரர்மலியு முன்சிபுக் கோர்ட்டினின்று
நடுக்கூறும் பலீடரென நான்குதிக்கும் பெயர்கொண்டோன்
திடுக்கூறும் படித்தமிழ்த் தெலுங்குமிங்கிலீ ஷுடங்கற்றோன்
வடுக்கூறும் வகைசிறிதும் வாராத நெறியுள்ளோன்.
சுநமனமா லாமெந்தை சுரந்ததவஞ் செய்தளித்த
மகவினமா மூவருண் மாணிக்க மிவனென்
றகவினமா யெல்லாரு மாநந்தங் கொளவந்தோன்
பகவனமா வருளிலவன் பன்னாளும் வாழியவே.

---

1 இயலிசையின் என்பதை - இசையியலின் என மாற்றிப் பொருள் கொள்க.
2 கயில்-கையில் என்பதன் போலி.

நூலாசிரியர்தம் அருமைப் புத்திரசிகாமணியான
சிரஞ்சீவி சங்கீதவிஜய பாலியன்
தனக்காகப் பாடப்பெற்றுத் தந்த
பாயிரம்.

சீலமார் நடைகிழித் திருமணி நிறைந்த
சேலமா நகர்புகழ்ச் செல்வனே யானச்
சகவன னின்றசீர் சுருணையென் றந்தை
பகையினர் தாமுகோர் பணியுநற் பரபலன்
கோருநற் பண்பெலாங் குவிந்தமென் பாடோன்
மாரியப் பன்றன் மகிழுநற் சோதரன்
நூனுக்க கோர் தெரிந்தெடா ளிர் தன்னைதி லின்னங்
அனுத்தனை யாயினு மகன்றிடாச் சிலன்
எத்தொழி லெக்கலை யெவ்வகை புகினும்
அத்தொழி லக்கலை யவ்வகை சிறந்தோன்
படாது படினும் பகுத்தான் றுழைத்தயின்
விடாது முயலினும் வெற்றிவேல் வீரன்
தக்கோர் யாருந் தாமேனை மெச்சும்
வக்கில் வேலை வகித்தசொல் வாய்மையன்
வேறு காணம் வேறிலை யென்னவே
வீணை யொலிக்கும் விசித்ர விற்பனன்
சங்கீத நூலென வனைத்தெக்கை தீர்த்த
சந்திரசந் திரிகைத் தமிழ்நூல் தன்னுள்
ஸ்வரப்ர காரஞ் சொரிந்தது மன்றி
சுவரத்து வியாஞ்சையுஞ் சொல்லை வன்று
தாளப்ரகாரத் திருத்தது சகல
தாள வரிசையுந் தனித்தனி சேர்த்து
பாடப்ரகாரம் பகர்ந்தது மன்றிக்
கூடச் செப்புனக் குளியல்மேற் குளியல்

சித்தாந் தஞ்சீர் சிறந்தவே தாந்தம்
சத்தாம் ப்ரபஞ்சச் சமர்ச் நூல்பல்
பொழிந்தன வின்னிசை பொழிந்தன பல்லயம்
ஒழிந்தது கிடையா தொன்றும் முன்னவே
பாணிக்க வொண்ணுப் பரமென் பிதாவா
மாணிக்க மகிபன் மகிழ்ந்தெனக் கன்பாய்ப்
புரிந்தகொம் பிற்றேன் பொழிந்துசீர் ததும்பும்
விரிந்தநான் மேன்மை வியப்பினும் வியப்பே.

சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.

கடவுள் துணை.

சங்கீத சந்திரிகை.

காப்பு—வெண்பா.

இக்குதிரை ஞால முயர்வா னிமிர்ப்பிறவுந்
தாங்குமொரு நாதன் றனைவணங்கித்—தேங்குதமிழ்ச்
சங்கீத சந்திரிகை தன்னை விரித்துரைப்பேன்
இங்கித மாக விசைந்து.

1-வது பாகம்.

ஸ்வர ப்ரகரணம்.

(1). சப்த ஸ்வரங்கள். 7.

ஸ்வர சமிக்ஞை.		ஸ்வர விவரம்.
ச	—	ஷட்ஜம்.
ரி	—	ரிஷபம்.
க	—	காந்தாரம்.
ம	—	மத்யமம்.
ப	—	பஞ்சமம்.
த	—	தைவதம்.
நி	—	நிஷாதம்.

(2). ஷோடச ஸ்வர சம்யோகங்கள். 16.

ஸ்வர சமிக்ஞை.			ஸ்வர விவரம்.
	ச.	—	ஷட்ஜம்.
1.	சு. ரி.	—	சுத்தரிஷபம் அல்லது 1-வது ரிஷபம்.
2.	ச. ரி.	—	சதுஸ்ருதி ரிஷபம் அல்லது 2-வது ரிஷபம்.
3.	ஷ. ரி.	—	ஷட்ஸ்ருதி ரிஷபம் அல்லது 3-வது ரிஷபம்.

ஸ்வர சமிக்ஞை. ஸ்வர விவரம்.

1. சு. க. ——	சுத்த காந்தாரம் அல்லது 1-வது காந்தாரம்.
2. சா. க. ——	சாதாரண காந்தாரம் அல்லது 2-வது காந்தாரம்.
3. அ. க. ——	அந்தர காந்தாரம் அல்லது 3-வது காந்தாரம்.
1. சு. ம. ——	சுத்த மத்யமம் அல்லது 1-வது மத்யமம்.
2. ப்ர. ம. ——	ப்ரதி மத்யமம் அல்லது 2-வது மத்யமம்.
ப. ——	பஞ்சமம்.
1. சு. த. ——	சுத்த தைவதம் அல்லது 1-வது தைவதம்.
2. ச. த. ——	சது ஸ்ருதி தைவதம் அல்லது 2-வது தைவதம்.
3. ஷ. த. ——	ஷட் ஸ்ருதி தைவதம் அல்லது 3-வது தைவதம்.
1. சு. நி. ——	சுத்த நிஷாதம் அல்லது 1-வது நிஷாதம்.
2. கை. நி. ——	கைசிக நிஷாதம் அல்லது 2-வது நிஷாதம்.
3. கா. நி. ——	காகலி நிஷாதம் அல்லது 3-வது நிஷாதம்.

(3). த்வாதச ஸ்வர ஸ்தானங்கள். 12.

	1.	2.	3.	4.	5.	6.	7.	8.	9.	10.	11.	12.
ஸ.	சு. ரி.	ச. ரி.	ஷ. ரி.	அ. க.	சு. ம.	ப்ர. ம.	ப.	சு. த.	ச. த.	ஷ. த.	கா. நி.	ஸ்*
		சு. க.	சா. க.						சு. நி.	கை. நி.		

நோட்:—வாத்தியங்களாலன்றி ஸ்வர ஸ்தானங்களை விவரித்துக்காட்டுவது சுலபமல்ல வாகையாலும், வாத்தியங்களில் வீணாவாத்தியம் முதன்மையானதாலும், இவ்விடத்தில் வீணை யின்படி வரையப்பட்டது. தந்தியே தக்கு ஷட்ஜமாய் நின்றபடியால் அதற்கு ஸ்வர ஸ்தானங் காட்டாதபடிக்கு சுத்தரிஷபமுதல் ஹெச்ச ஷட்ஜம் வரையில் உள்ள 16-ஸ்வரங்களின் 12-ஸ்வரஸ்தானங்கள் காட்டப்பட்டன. ஹெச்ச ஷட்ஜத்துக்கு உபரி ஷட்ஜ மென்றும் பெயர்.

(4). சப்த ஸ்வர நாமதேயங்களுக்குக் காரணம்.

ஷட்ஜம் என்றால்—(1)ஆறிலிருந்து பிறக்கிறது, (2) ஆறு பிறக்கிறது. (1) நாசி, கண்டம், ஹ்ருதயம், தாடை, நாக்கு, பல்,

* ஸ்வரத்திற்கு மேலே புள்ளியிருந்தால் அது ஹெச்சஸ்தாயி ஸ்வரமென்றும், கீழே புள்ளியிருந்தால் அது தக்குஸ்தாயி ஸ்வரமென்றும், புள்ளியில்லாமலிருந்தால் அது மத்யஸ்தாயி ஸ்வரமென்றும் அறிக. (14) லக்கத்தில் விவரம் பார்க்க.

ஆகிய இந்த ஆறு இடங்களிலிருந்தும் பிறக்கிறபடியால் ஷட்ஜமென்று பெயர். (2)ஷட்ஜத்தின் பின் வருகிற ஆறுஸ்வரங்களும் அதிலிருந்து பிறக்கிறபடியாலும் ஷட்ஜமென்றுபெயர்.

ரிஷபம் என்றால்—(1) ரிஷபத்தின் ஸ்வரம், (2) பிரவேசிக்கப்பட்டது. (1) ரிஷபக் கூச்சலைப்போ லிருப்பதால் ரிஷபமென்று பெயர். (2)ஹ்ருதயத்தில்பிரவேசிப்பதாலும் ரிஷபமென்று பெயர்.

காந்தாரம் என்றால்—(1) 'கா' என்பதைத் தரிப்பது,(2) ஸ்ருதி பெற்றுக்கொள்வது. (1)'கா' என்னும் எழுத்தைத் தரித்துக் கொண்டிருப்பதால் காந்தாரமென்று பெயர். (2) மந்த்ர தந்தி இதைப் பெற்றுக்கொள்வதாலும் காந்தார மென்று பெயர். தம்பூரில் மந்த்ரத்தந்தி ஜீவாளம் வைத்து மீட்டிப் பார்த்தால் அதில் அந்தர காந்தாரம் பேசும் விசேஷம் தெரியும்.

மத்யமம் என்றால்—(1) மத்ய ஸ்தானம், (2) மத்தியிலிருந்து பிறப்பது. (1) சப்த ஸ்வரங்களின் மத்தியிலிருப்பதால் மத்யமமென்று பெயர். (2) வக்ஷஸ்தலையும், கண்டத்தையு மடைந்து மத்ய அவயவமான நாபியி லின்று பிறப்பதாலும் மத்யமமென்று பெயர்.

பஞ்சமம் என்றால்—(1)ஐந்தாவது ஸ்தானம்,(2) ஐந்து இடங்களிலிருந்து பிறப்பது, (3) விஸ்தரிக்கப்படுவது. (1) சப்த ஸ்வரங்களில் பஞ்சமஸ்தானத்திலிருப்பதால் பஞ்சமமென்று பெயர். (2) நாபி, உரசு, ஹ்ருதயம், கண்டம், சிரசு ஆகிய ஐந்து இடங்களிலிருந்து பிறப்பதாலும் பஞ்சம மென்று பெயர். (3) குயிலினால் விஸ்தரிக்கப் படுவதாலும் பஞ்சமமென்று பெயர்.

தைவதம் என்றால்—(1) தழுவிக்கொண்டு வருவது, (2) புத்திமான்களால் பாடப் படுவது. (1) நாபி முதலிய ஸ்தானங்களைத் தழுவிக்கொண்டு வருவதால் தைவதமென்று பெயர். (2) புத்திமான்களால் சாதுர்யமாய்ப் பாடப் படுவதாலும் தைவத மென்றுபெயர்.

நிஷாதம் என்றால்—சேரப் பெற்றது. ஷட்ஜ முதல் ஆறு ஸ்வரங்களும் தன்னிடம் சேரப்பெற்றதால் நிஷாதமென்று பெயர்.

(5). சப்த ஸ்வர த்வனிகள். 7.

மயில் ஷட்ஜ த்வனியையும், ரிஷபம் ரிஷபத்வனியையும்,

மேஷம் காந்தார த்வனியையும், க்ரௌஞ்சபக்ஷி மத்யம த்வனியையும், கோகிலம் பஞ்சம த்வனியையும், குதிரை தைவத த்வனியையும், யானை நிஷாத த்வனியையும் உச்சரிக்கும்.

---

(6). சப்த ஸ்வரங்களுக்குக் காரணம்.

